
வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அச்சோ பதிகம்...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் அச்சோ பதிகம்.

## அருள்நிதி

## மன்னார்குடி பானுகுமார்.

(அச்சோ பதிகம்)

**அனுபவ வழி அறியாமை – Unexplained route to attainment)**

(அச்சோ என்பது இரக்கம் அல்லது வியப்பு என்பது பொருள். சிவபெருமான் தனக்கு செய்த அருளை எண்ணி வியந்து நெகிழ்ந்து போற்றும் வகையில் அமைந்த பாடல்கள்)

இதனுள்ளே


1.அறிவு முழுமை அது முக்தி. https://youtu.be/LWCJ_ZoCecg

2.பெருநெறி பிடித்தொழுக வேண்டும் https://youtu.be/1yVONIpTvw0

3.பொய்யும் மெய்யும் https://youtu.be/WkK79WdwBOA

4.தூயவாழ்க்கை நெறி எது? https://youtu.be/mzHXLj64Kx0

5.பயத்துக் கெல்லாம் மூலம் பற்றும் பாசமும் https://youtu.be/YJtosB4mfSw

6.பந்தம் அறுத்து எனை ஆண்டு https://youtu.be/Zk-U8pEgzEs

7.பாசமெனும் தாழ் உருவி https://youtu.be/HRfEZnLidDU

8.காமத்தை கட்டுப்படுத்த காயகற்பம் https://youtu.be/95q6bMenQJs

9.மும்மலம் அறுவித்து https://youtu.be/YBmwyz-oZPs

# 1. அறிவு முழுமை அது முக்தி.

ஆன்மா தெய்வீகமானது, ஆனால் ஜடப்பொருளின் கட்டுக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று வேதங்கள் கூறுகின்றன.

இந்தக் கட்டு அவிழும்போது ஆன்மா நிறைநிலையை அடைகிறது.

அந்த நிலையே முக்தி.

முக்தி என்பது விடுதலை என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது.

விடுதலை நிறைவுறாத நிலையிலிருந்து விடுதலை.
மரணத்திலிருந்தும் துன்பத்திலிருந்தும் விடுதலை.

- அறிவை அறிவால் அறிந்த நிலையே முக்தி. அறிவை அறிந்தோர் அன்பின் அறமே ஞானம்.
- மனம் காலியாக இருந்தால் அதுவே முக்தி.
- எள்ளுக்குள் எண்ணெயைப் போன்ற பிரபஞ்சம் எங்கும் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்து நின்று இயங்கும் ஆன்மா, ஜீவன், கடவுள், இயற்கை, சக்தி என்று பலவாறாகச் சொல்லப்படும் அரூபச் சக்தி நிலையை அறிவால் அறிந்து வாழ்வில் அமைதி பெறுவதே முக்தி.
- முக்தியை அடைந்த அளவே நமது வாழ்க்கையில் வெற்றி
- அவனை மறந்தால் நீ சிறியோன் அவனை அறிந்தால் நீ பெரியோன். அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம் அறிவு முழுமை அது முக்தி.

"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்

பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்

சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட

அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே."
(திருவா.பா.650)

- வீடு அடைவதற்கு உரிய நெறி இன்னது என்று அறியாது, அறிந்தும் முயலாது இருப்பவரோடு சேர்ந்து நானும் முயலாது இருந்தேன்.
- அப்படிப்பட்ட எனக்கு அன்பு நெறியை காட்டிக் கொடுத்து.
- பழைய வினைகள் கழியுமாறும் மலக் குற்றங்கள் நீங்குமாறும் செய்து.
- சிவமாம் தன்மையைத் தந்து,
- எம் தந்தை ஆட்கொண்டான்.

- இப்படிப்பட்ட அருளை யாரால் பெற முடியும்? இது அதிசயமே.

## வீடுபேறு என்னும் முக்தி – வேதாத்திரியம்

”வீடென்னில் இடமாம். தேடிடத் தேடிட
வீடிலாவீடு வெட்ட வெளியாகும்.
வீடெனும் மெய்ப்பொருள் வேக இயக்கமே.
விண்முதல் நிகழ்ச்சிகள் விவேகம் ஈறாக
வீடெனும் ஆதியே பொருள் எனக் கண்டபின்,
விவேகம் அதனுடைச் சிறப்பென விளங்கும்
வீடேஅறிவெனும் விளக்கம் பெறுதலே,
வீடுபேறாகும். விளங்கி விளக்கினேன்.” (ஞாக.பா.1847)

குடியிருப்பதற்காக செற்கல், மண் போன்றவற்றால் சாதாரணமாக வீடு என்கிறோம்.

ஆனால் ஆன்மீகத்தில் வீடு என்னும் வார்த்தை இடத்தைக் குறிப்பதாகவும், ஆன்ம விடுதலையைக் குறிப்பதாகவும் உள்ளது.

சுத்தவெளி என்னும் இறைநிலை இல்லாத இடமோ பொருளோ இயக்கமோ விளைவோ இல்லை.

குடியிருப்பு என்னும் வீட்டின் நாலு சுவரையும் மேற் கூரையையும் இடித்து அகற்றிவிட்டால் அது இடம். அங்கே சுத்தவெளிதான்.

பல பிறவிகள் எடுத்து வந்துள்ள மனிதன் தனது சுயம் தெய்வீகம், இறைநிலையின் ஒரு பகுதி அறிவாக இருக்கிறோம் என்பதை மறந்து, அழிந்து போகக்கூடிய உலகியல் விவகாரங்களில் பற்றுக் கொண்டு விட்டான்.

உலகியல் பற்றுக்களால் அழியக்கூடிய உடலைத் தான் என்று கருதி மயக்க நிலையில் வாழ்கிறான்.

உலகியல் பற்றுக்களில் இருந்து ஆன்மாவை விடுவித்தால் வீடுபேறு அடையலாம்.

இதுவே ஆறாவது அறிவு பெற்ற மனிதன் அடைய வேண்டிய பேறு ஆகும். அந்நிலையை முன்னோர்கள் முக்தி, மோட்சம் என்றார்கள்.

மீண்டும் பிறவா நிலை எய்துதல் ஆகும். வீடு என்னும் இடத்தை அறிவைக் கொண்டு, அறிவை உயர்த்தி, விரித்துத் தேடினோமே யானால் வீடில்லா வீடாகிய சுத்தவெளியை உணரலாம்.

அந்த சுத்தவெளியே உண்மைப் பொருள் ஆகும்.  அதனுடைய வேக இயக்கம்தான் விண் முதல் அனைத்துத் தோற்றங்களும் நிகழ்ச்சிகளும் ஆகும்.

இறைநிலை முதல் பிரபஞ்சத் தோற்றம் வரை இப்படித்தான் இயங்க வேண்டும் என்ற அதன் அறிவாகிய விவேகத்தால்தான் நடைபெறுகிறது என்பதை உணர்ந்தால் ஆற்றல் என்னும் வேகத்திற்கு உட்பொருள் அறிவு என்ற விவேகம்தான் என்ற சிறப்பினை விளங்கிக் கொள்ளலாம்.

வீடு என்பது அறிவு. தனக்குள்ளாகவும், எங்குமே நீக்கமற நிறைந்துள்ளது என்று விளங்கிக் கொள்வதுதான் வீடுபேறு என்பதை நான் விளங்கிக் கொண்டு, விளங்கிய வழியில் விளக்கியுள்ளேன்.வாழ்க வளமுடன்.

## 2. **பெருநெறி** பிடித்தொழுக வேண்டும்.

மனித வாழ்க்கை என்பது இறைநிலையை நாடிய அறிவின் பயணம்.

•நித் எது?
•அநித்தியம் எது?
•தேவை எது?
•தேவையற்றவை எவை?

எந்த அளவு தேவை என்று திட்டவட்டமாக அறிந்து அதற்கேற்றபடி எண்ணம், சொல், செயல்களைப் பழக்கி ஒவ்வொருவரும் கடமையை உணர்ந்து செயலாற்றி வாழும் அக்காலத்தில் எ ல லா வாழ்க்கை முறைகளும் சரியாக இருக்கும்

வாழ்க்கையைப் பற்றித் தெரிந்தவர்களாகவும், மற்றவர்களுக்கு உதவி செய்யக் கூடியவர்களாகவும் வயது வந்த மக்களையெல்லாம் மாற்ற வேண்டும்.

விட்டுக் கொடுத்து, மற்றவர்களுக்காக, வாழ்கின்ற வாழ்க்கைதான் தன்னையும் வாழ வைக்கும். பிறரையும் வாழ வைக்கும்.

தெளிந்த அறிவும், அறிந்த தெளிவில் விழிப்போடு செயலாற்றும் பண்பாடும்தான் மனிதனை மனிதனாக வாழ வைக்கும் தகுதியுடையது.

அறிவின் விழிப்புடன் பொருட்களோடும் மக்களோடும் அளவு மற்றும் முறையோடு உறவு கொள்வதும், அனுபோகிப்பதும் நெறியான, சிக்கலற்ற, துன்பம் விளையாத வாழ்வுக்கு இன்றியமையாதனவாக இருக்கின்றன.

மனிதவாழ்வு நிறைவு பெற, பொருள், புகழ், அதிகாரம், புலன் இன்பம் என்ற நான்கும் ஓரளவில் அவசியம்தான்.

மனிதனுடைய மனதிலே ஒரு நிறைவு வேண்டும். அந்த நிறைவிலிருந்து எழக்கூடியதுதான் இன்பமான வாழ்வு என்பதாகும்.

இத்தகைய பெருநெறியில் வாழ்வதுதான் முழுமை.

பெருநெறி அல்லாத சிறுநெறிகளை நெறி என்று நினைத்துக் கொண்டிருந்த என்னை நெறிப்படுத்தி அருள் செய்த இறைவனின் அருளை எண்ணி வியக்கிறது இப்பாடல்

நெறி அல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்

சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்

குறி ஒன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தை எனக்கு

அறியும்வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.
(திருவா.பா.651)

- பெருநெறி அல்லாத சிறுநெறிகளை நெறி என்று நினைத்துக் கொண்டிருந்த என்னை,
- அந்தச் சிறுநெறிகளில் செல்லாது, திருவருள் நெறியாகிய உண்மை நெறியில் செரு மாறு செய்து.
- தனக்கென ஓர் அடையாளம் இல்லாத கூத்தன்,
- தன்னுடைய திருக்கூத்தனைக் காட்டி, அறியுமாறு அருள் செய்தான்.
- இந்தப் பேற்றினை வேறு யாரால் பெற முடியும்? இது அதிசயமே.

## வேதாத்திரிய நெறி - வேதாத்திரியம்

மனிதன் இன்பமான வாழ்க்கையை விரும்புகிறான். உயிர் இன்ப துன்பத்தை அனுபவித்தாலும், இந்த உடலைக் கருவியாகக் கொண்டே அனுபவிக்கிறது.

ஆரோக்கியத்துடன் இருந்தால்தான் வாழ்வில் இன்பம் நிலவும். உடல் நலம் குன்றினால் துன்பமே வந்து சேரும்.

நோயின் தாக்கம் அதிகமாகும்போது எதிர்கால வாழ்வையே பாதித்துவிடும். பிறப்பின் நோக்கத்தையே கெடுத்துவிடும். இதையே திருமூலர்

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே” என்கிறார்.

உடல் நோய்வாய்ப்பட்டால், உடலைப் பாதிப்பதோடு கடமைகளையும், செயல் திறத்தையும் பாதிக்கிறது. நம் சமுதாயப் பணிகளையும் கெடுத்து விடுகிறது.

உடலுக்கும் உயிருக்கும் இடையே ஏற்படும் பிணக்கு நோய். உடலும் உயிரும் இணைந்து சென்றால் வாழ்க்கை. உடலுக்கும் உயிருக்கும் பிரிவு ஏற்பட்டால் மரணம்.

மனிதப் பிறவியின் நோக்கமே தன்னை முழுமையாக உணர்ந்து, இயற்கை இன்பங்களை அளவுடன் துய்த்து, அறிவிலே முழுமைப் பெற்று தனக்கும் பிறருக்கும் துன்பம் தராமல் வாழ்ந்து இறைநிலை அடைவது. இந்த ஞானத்தைத்தான் போதிப்பது மனவளக்கலை.

ஐந்தறிவு விலங்குகளுக்கு வாழ்வின் நோக்கம் கிடையாது. இயற்கையில் நடக்கும் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் ஆகிய ஐந்து நிகழ்ச்சிகளை மட்டுமே உணர்கின்றன. அவற்றைச் சார்ந்தே வாழ்ந்து மடிகின்றன.

ஆனால் மனிதனுக்கு மட்டுமே ஆறறிவு உள்ளது. ஆறாவது அறிவாகிய அனுமான அறிவின் பயன் என்னவென்றால், ஐந்து நிகழ்ச்சிகளை உணர்வதோடு மட்டுமல்லாது, இந்நிகழ்ச்சிகள் ஏன்? எவ்வாறு நடைபெறுகின்றன? மூலம் எது? என் மனிதனால்
அறிய முடிவதுதான்.

இப்பிரபஞ்சத் தோற்றங்கள் அனைத்திற்கும் காரணப் பொருளாக உள்ளது இறைநிலை எனும் சுத்தவெளியே. அது அமைத்துள்ள தன்மாற்றத்தின் உச்சநிலையே நாம்.

எனவே இந்த சுத்தவெளியின் தன்மையை உணர்ந்து, தூய்மை பெற்று அதுவாதலே முழுமைப்பேறு. மீண்டும் நமது மூல நிலையை அடைதலே வீடுபேறு ஆகும்.

இதனையே வேதாத்திரியம் "பிறவியின் நோக்கம் அறிந்தபோது அடைந்த பேரின்பத்தை எவ்வாறு உரைக்க முடியும்" என்கிறது. அது அவரவர்களே உணர்ந்து அனுபவிக்க வேண்டிய ஒன்றாகும்.

அதை முடிவாக அடைந்தால் அது எவ்வாறு இருக்கும் என்று நினைத்துப் பார்ப்பதாகும்.

அப்போது அறிவு அடையும் விடுதலை பேரானந்தம். சுருங்கச் சொல்ல வேண்டுமானால், மனிதன் இறை உணர்வு பெற வேண்டும்.

இறை உணர்வு பெறுவது என்பது இ   த்  வரை கடினமானதாகவும், அஞ்சத்தக்கதாகவும் இருந்து வந்தது.

வேதாத்திரி மகரிஷி அவர்கள் இவ்வுணர்வைப் பெறுவது எப்படி என்று எளிமையாகக் கூறியுள்ளார்கள்.

பிறவியின் நோக்கத்தை அறிந்தபோதும்
  பின் அந்த எல்லையினை அடைவதற்கு
அறநெறி விழிப்போடு பொறுப்புணர்ந்து
  ஆற்றி மனம், செயல், தூய்மை ஆனபோதும்
உறவுகளிலும் உண்மை நிலைஉணர்ந்து ஆற்றி
  உயர்வான துறவுநிலை உணர்ந்தபோதும்
துறவுநிலை முடிவாக பெற்றபோதும்
  துய்த்த பேரின்பம் எவ்வாறு உரைப்பேன்" (ஞாக.பா.1849)

முழுமைப்பேறு அடைய வேண்டுமெனில் நமது ஆன்ம களங்கங்கள் கழிக்கப்பட வேண்டும்.

அதற்கு இறைநிலை மாறாத நிலையில் இருந்து கொண்டு அறச் செயல்கள் செய்தல் ஒன்றே வழியாகும்.

அறநெறியில் தானும் வாழ்ந்து பிறருக்கும் நன்மை
செய்ய வேண்டுமெனில் நல்ல உடல் நலம் தேவை. உடல் நலம் காக்காது விட்டுவிட்டால் வாழ்வில் அமைதியும் இனிமையும் இருக்காது.

வாழ்வின் நோக்கத்தையும் அடைய முடியாது. எனவே ஒவ்வொருவரும் உடல் நலம் காத்தல் அவசியம். வாழ்க வளமுடன்.

# 3. பொய்யும் மெய்யும்

குருவும் அவரது நான்கு சீடரும் ருசியால்கோட் என்னும் நகரை அடைந்தார்க்ள்.



தம் சீடரிடம், இந்தப் பணததை எடுத்துக் கொண்டு நகரத்துக்குள் செல். அரைப் பணத்துக்கு மெய்யும் மீதம் அரைப் பணத்துக்கு பொய்யும் வாங்கி வா என்றார்.

தம் குருவிடம் ஏன் எதற்கு என்று ஒரு பொழுதும் கேட்டறியாத அந்தச் சீடர், குருவின் கட்டளையை ஏற்று, நகரத்திலிருந்த அனைவரிடமும் ஒரு பணத்துக்கு பொய்யும். மற்றொன்றுக்கு மெய்யும் வேண்டும் என்று கேட்டுக் கொண்டே சென்றார்.

பலரும் அவரை கேலி செய்தனர்.

கடைசியாக ஒரு கடைக்காரர் பணத்தை வாங்கிக் கொண்டு வாழ்க்கை என்பது பொய். மரணம் என்பது மெய். இதை உங்கள் குருவிடம் சென்று சொல்லுங்கள். என்றார்.

”ஒரு நல்ல இடம் கிடைத்துவிட்டது.

உண்மை தெரிந்த ஒரு மனிதர் இங்கே இருக்கிறார்.

நாம் அங்கே செல்வோம் வா? என்றுசீடரை அழைத்துச் சென்றார் குருநானக்.

பொய் எல்லாம் மெய் என்று புணர்முலையார் போகத்தே

மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்

தையல் இடம் கொண்டபிரான் தன்கழலே சேரும் வண்ணம்

ஐயன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. (திருவா.பா.652)

- பொய்ப் பொருள்களை எல்லாம் மெய்ப்பொருள்கள் என நினைந்து.
- முலையினை உடைய மகளிரைத் தழுவி, அந்த இன்பத்தில் மயங்கிக் கிடந்தேன்.
- அப்படிப்பட்ட என்னை, இறந்து படாதவாறு காப்பாற்றி,
- உமையை இடப்பாகத்தில் கொண்டவனும் எனது தலைவனும் ஆகிய பெருமான்,
- தன் திருவடிகளையே வந்து அடையுமாறு அருள் செய்தான்.
- இதனை வேறு யார் பெற முடியும், இது அதிசயமே.

## பொய்யும் மெய்யும் - வேதாத்திரியம்

“மெய்” என்றால் ஒன்றுபட்டது என்றும், “பொய்” என்றால் இரண்டுபட்டது என்றும் பொருள்படும்.

பொய் என்றால் இல்லாதது என்று பலரால் கருதப்படுகிறது. இல்லாதது எப்படி இருக்க முடியும்? அதை எப்படிச் சொல்ல முடியும்? இருப்பதைத் தான் கருதுகிறோம், பேசுகிறோம்.

ஒருவன் ஒரு பொருளை வைத்திருக்கிறான். ஆனால் கேட்பவர்களுக்கு அப்பொருள் இல்லை என்று சொல்லுவதைப் பொய் என்று சொல்லுகின்றோம்.

அந்தப் பொருளை அவன் வைத்திருப்பது அவன் உள்ளத்தில் மறைந்து விடவில்லை, வேறு ஏதோ காரணத்தால் இல்லை என்று சொல்லுகின்றான்.

அவனுடைய உள்ளத்தில் அப்பொருள் இருப்பது, இல்லை என்று சொல்ல வேண்டுமென்பது ஆகிய இரண்டும் இருக்கின்றன.

இருக்கிறது என்ற ஞாபகத்தோடு இல்லையென்று சொல்ல வேண்டிய ஞாபகமும் கூடி இரண்டுபட்டு விட்டது.

அதே பிளவுபட்ட கருத்து, சொல்லிலும் வந்தால் அதைப் பொய் என்று சொல்லுகிறோம்.

இதே போன்று ஏக நிலையாக – அரூப நிலையாக இருந்த தெய்வநிலை, அணுவாகவும் பரிணாமமடைந்து விட்டபின், அது இரு நிலைப்பட்டு விட்டது.

இவைகளில் பின்னர் தோன்றிய அணு முதல் அண்ட கோடிகளையும் அவைகளின் இயக்க நிகழ்ச்சிகளையும், வேதாந்திகள் பொய் என்று சொல்லுகின்றார்கள்.

அதாவது இரண்டுபட்ட நிலை என்று சொல்லுகின்றார்கள்.

இப்படி இரண்டுபட்ட நிலைகளில், ஏக நிலையாக உள்ள அரூப நிலையை உணர்ந்து கொள்ளும் ஆற்றலை ஞானம் என்றும், அதை மறந்து இரண்டுபட்ட நிலையை மாத்திரம் கண்டு அறிவு மிரட்சி கொண்டு இயங்கி நிற்கும் நிலையை மாயை என்றும் கூறுகின்றார்கள். (அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி)

# 4. தூயவாழ்க்கை நெறி எது?

**சுவாமி விவேகானந்தர் கூறிய 7 வாழ்க்கை ரகசியங்கள்**

மனிதர் இயல்பில் தெய்வீகமானவர்கள் என்பதையும், இந்த தெய்வீகத்தை வெளிப்படுத்தவதே மனித வாழ்வின் சாரம் என்பதையும் விவேகானந்தர் தன் அனைத்து சொற் பொழிவுகளிலும், எழுத்துக்களிலும் வலியுறுத்துவதைக் காணலாம்.

காடுகளிலும், மலைகளிலும் வசிக்கும் ரிஷிகளிடமும், சமூகத்தில் ஒரு பிரிவினரிடமும் மட்டுமே குழுமியிருந்த ஆன்மீகம் சமூகத்தில் இருந்த அனைவரிடமும் பரவ வேண்டும் என அவர் விரும்பினார்.

## 1.ஒவ்வொரு உயிரிலும் கடவுள்

கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர தனியாக வேறு கடவுள் ஒருவர் உலகில் இல்லை.

சுயநலமற்ற தன்மையே கடவுள் ஆகும். ஒருவன் செல்வந்தனாக வாழ்ந்த போதும் சுயநலம் இல்லாதவனாக இருந்தால் அவனிடம் கடவுள் இருக்கிறார்.

உங்களுடைய நரம்புகளை முறுக்கேற்றுங்கள். காலம் எல்லாம் அழுது கொண்டிருந்தது போதும். இனி அழுகை என்ற பேச்சே இருக்கக் கூடாது. சுயவலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்.

ஒரு நல்ல லட்சியத்துடன் முறையான வழியைக் கைக்கொண்டு தைரியத்துடன் வீரனாக விளங்குங்கள். மனிதனாக பிறந்ததற்கு வாழ்ந்து சென்ற பின்னும் ஏதாவது அடையாளத்தை விட்டுச் செல்லுங்கள்.

தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதும் தான் எல்லா வழிபாடுகளின் சாரமாகும்.

ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் நோயாளிகளிடமும் இறைவனைக் காண்பவனே உண்மையான வழிபாடு செய்பவன் ஆவான்.

## 2.உண்மையான மகிழ்ச்சி

மன்னிக்கக் கூடியதும், சமநோக்குடையதும், நிலை தடுமாறாததுமான மனதை எவன் பெற்றிருக்கிறானோ அவனே ஆழ்ந்த அமைதியில் திளைத்திருப்பான்.

கருணை என்பது சொர்க்கத்தைப் போன்றது. நாம் அனைவரும் கருணையுள்ளவர்களாக மாறி சொர்க்கத்தில் மகிழ்ந்திருப்போம்.

உங்கள் தவறுகளைப் பெரும் பேறாக நினையுங்கள். அவை நம்மை அறியாமலே நமக்கு வழிகாட்டும் தெய்வங்கள் என்றால் மிகையில்லை.

அழுகை பலவீனத்தின் அறிகுறி. அடிமைத்தனத்தின் அறிகுறி. தோல்விகள் இல்லாத வாழ்க்கையால் பயனேதும் இல்லை. போராட்டம் இல்லாத வாழ்க்கை சுவையாக இருக்காது.

தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. உன்னைத் தவிர யாராலும் உன்னை
மகிழ்விக்க முடியாது.

### 3.உன்னைப் பற்றியே சிந்திக்காதே

நம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டே இருப்பது சுய நலங்களிலேயே மிகப்பெரிய பாவமாகும். சுயநல எண்ணம் எவ்வளவு குறைகிறதோ அந்த அளவுக்கு ஒருவன் கடவுளை நெருங்க முடியும்.

சமநிலையில் இருந்து பிறழாதவன், மன சாந்த முடையவன், இரக்கமும், கருணையும் கொண்டவன் ஆகியோர் நல்ல பணிகளை மட்டும் வாழ்வில் செய்ய முற்படுவர். அதன் மூலம் அவன் தனக்கே நன்மையைத் தேடிக் கொள்கிறான்.

தீமையைச் செய்வதால், நமக்கு நாமே தீமை செய்கிறோம். நன்மையைச் செய்வதால் நமக்கு நாமே நன்மை தேடிக் கொண்டவர்களாகிறோம்.

சுயநல எண்ணம் சிறிதும் இல்லாமல், பணம், புகழ் என்னும் எதிர்பார்ப்பு வைக்காமல் பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காகவே ஒருவன் தொண்டு செய்தால், உலகத்தையே மாற்றி அமைக்கும் சக்தி அவனிடமிருந்து வெளிப்படும்.

### 4.மதத்தின் ரகசியம்

சிறு சிறு ஆசைகளை அனுபவித்துத் தீர்க்க வேண்டும். பெரிய ஆசைகள் அனைத்தையும் விவேகத்தால் ஆராய்ந்து விட்டுவிட வேண்டும்.

நீங்கள் இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம் மாறிவிடும். உங்கள் குரல் மாறிவிடும், உங்கள் தோற்றமே மாறிவிடும். நீங்கள் மனித குலத்திற்கு ஒரு வரப் பிரசாதமாக இருப்பீர்கள்.

உடலையும் புலன்களையும் வழிநடத்தும் போது, மனம் என்ற கடிவாளத்தை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

ஒருவன் தன்னை வெறுக்கத் துவங்கிவிட்டால், அவன் கீழ்நிலைக்குச் செல்வதற்கான கதவு திறந்துவிட்டது என்று பொருள்.

எந்த வேலையாக இருந்தாலும், அதனைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளி. எந்த வேலையும் அற்பமானதல்ல.

### 5.விருப்பங்கள் நிறைவேறும்

அனைத்திலும் இறைவனை காண்பது நம்முடைய லட்சியமாகும். அனைத்திலும் காண முடியாவிட்டால், நாம் நேசிக்கும் ஒன்றிலாவது பார்க்க வேண்டும்.

நீங்கள் இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம் மாறுவதுடன், குரலும், தோற்றமும் மாறுகிறது. அப்போது நீங்கள், மனித குலத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக மாறிவிடுவீர்கள்.

பிரார்த்தனையால் நுண்ணிய ஆற்றல்கள் எளிதாக விழிப்படைகின்றன. பக்தியுணர்வுடன் பிரார்த்தனை செய்தால் அனைத்து விருப்பங்களும் நிறைவேறும்.

### 6.மன உறுதியுடன் இருங்கள்

எத்தனை நல்ல நூல்களை வாசித்தாலும் நம்மால் தூய வராக முடியாது. உண்மையை நாம் உணர வேண்டு மானால், தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். அப்போது மெய்யுணர்வு நம்முள் மலரத் தொடங்கும்.

தன்னுடைய பலவீனங்கள், குற்றங்கள், பாவங்கள் எல்லா வற்றையும் வேறொருவரின் மேல் சுமத்துவது மனித இயல்பாக இருக்கிறது. நம்முடைய தவறுகளை உணர மறுப்பது தான் இதற்குக் காரணம்.

ஒவ்வொரு மனித இதயத்தின் உள்ளும் மிக ஆழத்தில் ஆதி அந்தமில்லாத இறைவன் ஒளிந்து கொண்டிருக்கின்றான். அவனை உணர்ந்தவனே உண்மையை உணர்ந்தவன் ஆவான்.

உங்களுக்குப் பிடித்ததை கடைபிடிப்பதுபோல, மற்றவர்களும் அவரவருக்கு விருப்பமானவற்றை பின்பற்றும் சுதந்திரத்தைக் கொடுங்கள். ஏனென்றால், சுதந்திரம் இல்லாத எதுவும் வளர்ச்சி அடைவதில்லை.

எந்த விஷயத்தையும் நன்கு ஆய்ந்து பாருங்கள். கொண்ட கொள்கை மற்றும் குறிக்கோளில் மனவுறுதியுடன் இருங்கள்.

### 7.அன்புதான் வாழ்க்கை

அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றும் நமக்கு தேவையில்லை. அன்பு தான் வாழ்க்கை.

நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவிபுரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும் தான்.

கல்வி என்பது மூளைக்குள் பல விஷயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. அப்படித் திணிக்கப்படும் அந்த விஷயங்கள் வாழ்நாள்

முழுவதும் ஜீரணம் ஆகாமல் தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கும்.

அனைத்து தேவைகளையும், துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது.

நமக்கு நாமே நன்மை செய்து மோட்சத்தை அடைவதை விட மற்றவர்களுக்கு நன்மை செய்து, ஆயிரம் நரகங்களுக்கு செல்ல தயாராக இருக்க வேண்டும்.

துணிந்து செயல்படுங்கள். எதையும் முடிக்க வேண்டும் என்ற முடிவுடன் செயல்பாட்டில் இறங்குங்கள். 'முடியாது' என்ற வார்த்தையை அகராதியை விட்டு அகற்றுங்கள்.

"தூய நெறியில் சேருமாறு பெருமான் எனக்குப் பேரருள் செய்தான்" என்று இந்தப் பாடலில் மாணிக்கவாசகர் பாடுகிறார்.

மண்அதனிற் பிறந்து எய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணம் இலா அன்பு அருளி எனைஆண்டிட்டு என்னையும்தன்
சுண்ணவெண் நீறு அணிவித்துத் தூநெறியே சேரும்வண்ணம்
அண்ணல் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.
(திருவா.பா.653)

- இம்மண் உலகில் மீண்டும் பிறந்து. களைப்பு அடைந்து. இறக்க இருந்த என்னை,
- எதிர்பாராத வகையில் என்மீது அன்பு செய்ய அருளி,
- என்னை ஆட்கொண்டு,
- தன்னுடைய திருநீற்றுப் பொடியை பூசுமாறு செய்வித்து,
- தூய நெறியில் சேருமாறு பெருமான் எனக்குப் பேரருள் செய்தான்.
- இதனை வேறு யார் பெற முடியும். இது அதிசயமே

## தூயநெறி எது? தூயவாழ்க்கை நெறி எது? வேதாத்திரியம்

பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்டதே வாழ்க்கை. ஆறறிவு படைத்த நாம் பிறந்த உடனே நடப்பதில்லை.

ஆனால் ஐந்தறிவு வரையுள்ள உயிரினங்கள் பிறந்த சிறிது நேரத்திலேயே நடக்கின்றன. நாம் வாழும் வாழ்க்கை இன்பமாகவே உள்ளது.

ஆனால் நம்முடைய புலன்கள் வழி செல்வதாலும் பழக்கத்தாலும், சூழ்நிலைகளாலும் பெரும்பாலும் துன்பத்தை உண்டாக்கி கொள்கிறோம்.

கல்லூரிக்குச் செல்ல 12 வகுப்புகள் படிக்க வேண்டும் என்பது போல் வாழ்வில் முழுமைப்பேறும் குணநலப் பேறும் அடைய 12 வாழ்க்கைத் தத்துவப்படிகளை அளித்துள்ளார்.

தேவைகள் மூன்று: நம் உடலின் தேவைகளை மூன்றாகப் பிரித்துள்ளார். பசி, தாகம்,. முதல்படி. தட்பவெப்ப நிலையி லிருந்து நம்மைக் காத்துக் கொள்ளல் இரண்டாம்படி, உடலின் கழிவுகள் நீக்கம் மூன்றாம் படி.

காப்பு மூன்று: பிற உயிர்களின் தாக்குதலில் இருந்து காத்தல், மழை, புயல், பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றத்திலிருந்து காத்தல், தற்செயல் விபத்து நடக்காமல் (accident) காத்தல்.

அறநெறி மூன்று: தனக்கும் பிறருக்கும் தற்காலத்திலோ, பிற்காலத்திலோ உடலுக்கும் மனதுக்கும் துன்பம் தராத வகையில் எண்ணம், சொல், செயல்களை அமைப்பது ஒழுக்கம். தா ன்.

- குடும்பம், உறவினர், ஊர், உலகம் என்ற ஐந்து வகையான கடமை. எவ்வித எதிர்பார்ப்புமின்றி, தேவைப்படுவோர்க்கு, அந்த நேரத்தில் உதவுதல் ஈகை.
- அறிவின் நிலை: அடிப்படைத் தேவையான நம்பிக்கை. ஒவ்வொன்றுக்கும் விளக்கம் பெறுமளவு அறிவு நிலையில் வாழ்தல். தன்னையறிந்த பின் முழுமை நிலையடைதல்.
- நாம் ஒரு சிறு துரும்பாய் வாழ்க்கை யெனும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படும் நிலையில் இந்த 12 படிகளும் நமக்கு படகாய் இருந்து நம்மை கரை சேர்க்க உதவும் எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

## மனித சக்தி மகத்தான சக்தி

உடல் லகுவாக இருக்க வேண்டும். மனம் அமைதியாக இருக்க வேண்டும் Peaceful Mind. வாழ்க்கை உபயோகமாக இருக்க வேண்டும் அதற்கு நாம் வாழும் காலத்திலேயே வாழ்ந்து கொண்டு இருக்கும் தத்துவ ஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் சொல்லிக் கொடுத்துள்ள உடற்பயிற்சிகள், தவங்கள், காயகல்ப பயிற்சி, தற்சோதனை முறைகள் உறுதுணையாக உள்ளன.

## இரண்டொழுக்கப் பண்பாடு

இவ்வுலக இன்னல்களிலிருந்து விடுபட இரண்டொழுக்கப் பண்பாடு கூறுகிறார்

- .“நான் எனது வாழ்நாளில் பிறரது உடலுக்கோ மனதுக்கோ துன்பம் தரமாட்டேன்”
- துன்பப்படும் உயிர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.

ஆகா! என்ன அற்புதமான வரிகள். அனைவரும் இதைக் கடைப்பிடித்தால் துன்பமே இவ்வுலகில் இருக்காது. இன்புறுவோம்! இயல்பாய் வாழ்வோம்.

நாம் வாழும் காலத்தில் திருவாசகம் சொல்லியபடி தூயநெறியில் வேதாத்திரியத்தின் இரண்டொழுக்கப் பண்பாட்டை, மேற்கொள்வோம்.

வாழ்க வளமுடன்!!


## 5.பயத்துக் கெல்லாம் மூலம் பற்றும் பாசமும்.

உலகில் சுவாமி விவேகானந்தர் மிகவும் வெறுத்தது ஒன்று உண்டு என்றால், அது 'பயம்'தான்! "பலமே வாழ்வு; பலவீனமே மரணம்" என்றார் விவேகானந்தர்.

பயத்தை எப்படி வெல்வது? பயம் யாருக்கு வரும்? தன்னம்பிக்கை குறைவாக உள்ளவர்க்கே பயம் வரும்.

'இவனை நம்பு அல்லது அவனை நம்பு என்கிறார்கள். ஆனால் நான் கூறுகிறேன்... முதலில் உன்னிடமே நீ நம்பிக்கை வை. எல்லா ஆற்றல்களும் உனக்குள்ளேயே உள்ளன' என்றார் விவேகானந்தர்.

’இளைஞன்’ என்பதற்கு அவர் சொல்லும் இலக்கணம் என்ன தெரியுமா? 'பயமற்றவனே இளைஞன்!'



ஆனால் நான் கூறுகிறேன்... முதலில் உன்னிடமே நீ நம்பிக்கை வை. எல்லா ஆற்றல்களும் உனக்குள்ளேயே உள்ளன' என்றார் விவேகானந்தர்.

இறைவன் மாணிக்கவாசகரை ”பயப்படாதே” என்று சொல்லி ஆட்கொண்டதாக இப்பாடலில் சொல்லுகிறார்.

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன்நான் உடையானே அடியேனை வருகஎன்று
அஞ்சேல்என்று அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. (திருவா.பா.654)

- பஞ்சு போன்ற மென்மையான பாதங்களை உடைய மகளிரது கடைக்கண் பார்வையால் கவரப்பட்டு,
- மனதில் துன்பம் மிகுமாறு இருந்த நான் உன் திருவருளை பெற்றேன். அதனால் உய்ந்தேன். (தப்பிப் பிழைத்தேன்)
- என்னை அடிமையாகக் கொண்டவனே! அடியேனை ”வருக!” என்றும்“, ”பயப்படாதே!” என்றும் கூறி, அருள் செய்தாய், இவ்வருளை வேற யார் பெற முடியும்? இது அதிசயமே.

## அச்சம் – வேதாத்திரியம்

- இயக்கங்களுக் கெல்லாம் இறுக்கத் தத்துவம் மூலம்.
- பயத்துக் கெல்லாம் மூலம் பற்றும் பாசமும்.
- சினம், அச்சம் இரண்டும் ஓர் மனிதன் வாழ்வில் சீர்குலைய செய்யும் கொடும் உட்தீயாகும்.
- சினம் அச்சம் ஒழிய சிந்தனையை ஏற்றி சிவன் சீவன் நிலைகளை நன்குணர வேண்டும்.

”மனதில் துன்பம் மிகுமாறு இருந்த நான் உன் திருவருளை பெற்றேன். அதனால் உய்ந்தேன்.” என்கிறார் மாணிக்கவாசகர்.

துன்பங்களை இனிதாய் மாற என்ன செய்ய வேண்டும்? வேதாத்திரியம் வழி சொல்கிறது.

வாழ்வினிலே அனுபோகப் பொருள் எண்ணிக்கை
  வளரவிடக் கூடாது இன்பம் வேண்டின்!
வாழ்வினிலே பசிவெப்ப தட்ப ஏற்றம்
  வளர்க்காமல், இவற்றை ஓர் அளவில் தாங்கி,
வாழ்வினிலே துன்பத்தைச் சகித்துக் கொள்ளும்
  வழக்கத்தைப் பழக்கத்தால் அடைய வேண்டும்
வாழ்வினிலே துன்பங்கள் இனிதாய் மாற,
  வழியிதுவே! அனுபவத்தில் உணர்ந்த உண்மை!” (ஞாக.பா.1557)

மனித வாழ்க்கை இனிமையாக இருக்க விரும்பினால், பயன்படுத்துகின்ற வாழ்வியல் துய்ப்புப் பொருட்களின் எண்ணிக்கையை அதிகமாக்கக் கூடாது.

இயற்கைத் துன்பங்களான பசி, வெப்ப தட்ப ஏற்றத்தாழ்வு ஆகியவற்றை வளரவிடக் கூடாது.

இயற்கைத் துன்பங்களை சகித்துக் கொண்டும், ஏற்றுக் கொண்டும் வாழ்கின்ற வழக்கத்தைப் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

பிறந்தது முதல் இறக்கும் வரை இயற்கையில் ஏற்படும் இந்த வகையான துன்பங்களை மனிதன் அனுபவிக்கப் பழகிவிட்டால், துன்பங்கள் எல்லாம் இனிமையாக மாறுவதற்கு சரியான வழி இதுதான் என்பதை அனுபவத்தின் மூலம் உணர்ந்து கொண்ட உண்மை இதுவே ஆகும்.துன்பங்களை நீக்கி ஆனந்தமாக வாழ்வோமாக!

## 6. பந்தம் அறுத்து எனை ஆண்டு

ஒரு ஊரில் ஒரு செல்வந்தன் இருந்தான்.

அவன் வியாபார நிமித்தமாக வெளியூர் சென்று திரும்பிய போது அவனது அழகான பெரிய பண்ணை வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது.

அந்த ஊரிலேயே மிகவும் அழகான வீடு அவனுடையது தான். அந்த வீட்டை இரண்டு மடங்கு விலை கொடுத்து வாங்க பலரும் தயாராக இருந்தனர். ஆனால் இவன் விற்கவில்லை.

இப்போது அந்த வீடு அவன் கண் முன்னே எரிந்துகொண்டிருந்தது. ஆயிரம் நபர்கள் சுற்றி நின்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள்.

தீ முழுவதுமாக பரவிவிட்டதால் அதை அனைத்தும் பிரயோஜனம் இல்லை என்று எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

வணிகனோ செய்வதறியாமல் கண்ணில் நீரோடு புலம்பி கொண்டிருந்தான். ஐயோ என் வீடு..!!! என் வீடு...!! என்று அலறினான்.

அப்போது அவனின் மூத்த மகன் ஓடிவந்து ஒரு விஷயத்தை சொல்கிறான்.

“தந்தையே ஏன் அழுகிறீர்கள்? இந்த வீட்டை நான் நேற்றே மூன்று மடங்கு லாபத்திற்கு விற்றுவிட்டேன். இதனால் நமக்கு நஷ்டம் இல்லை“ என்று கூறினான்.

இதை கேட்ட வணிகனுக்கு ஏக மகிழ்ச்சி. அவனது சோகம் அனைத்தும் மறைந்து மகிழ்ச்சி உண்டானது.

இப்போது வணிகனும் கூடி இருந்த கூட்டத்தில் ஒருவனாக நின்று வேடிக்கை பார்க்க தொடங்கினான்.

அதே வீடு தான், அதே நெருப்பு தான் ஆனால் சில வினாடிகளுக்கு முன் இருந்த தவிப்பும் சோகமும் இப்போது அவனிடம் இல்லை.

சிறிது நேரத்தில் வணிகனின் இரண்டாவது மகன் ஓடி வந்து "தந்தையே ஏன் இப்படி கவலையில்லாமல் சிரிக்கிறீர்கள்? நாங்கள் விற்ற இந்த வீட்டிற்க்கு முன்பணம் மட்டுமே வாங்கியுள்ளோம். முழு தொகை இன்னும் வரவில்லை. வீட்டை வாங்கியவன் இப்போது மீதி பணத்தை தருவானா என்பது சந்தேகமே" என்றான்.

இதை கேட்ட வணிகன் அதிர்ச்சி அடைந்தான். மீண்டும் சோகத்தில் ஆழ்ந்தான். கண்ணீரோடு மீண்டும் புலம்ப ஆரம்பித்தான். தனது உடமை எரிகிறதே என்ற எண்ணம் மீண்டும் அவனை வாட்டியது.

சில மணித்துளிகள் பின்பு வணிகனின் மூன்றாவது மகன் ஓடி வருகிறான்.

"தந்தையே கவலை வேண்டாம். இந்த வீட்டை வாங்கிய மனிதன் மிகவும் நல்லவன் போலும். இந்த வீட்டை வாங்க அவன் முடிவு செய்தபோது வீடு தீ பிடிக்கும் என்று உங்களுக்கும் தெரியாது எனக்கும் தெரியாது.

ஆகையால் நான் பேசியபடி முழு தொகையை கொடுப்பது தான் நியாயம் என்று என்னிடம் இப்போது தான் சொல்லி அனுப்பினான்" என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தான்.

இதை கேட்ட வணிகனுக்கோ ஏக சந்தோஷம். கடவுளுக்கு நன்றி சொல்லி ஆடிப்பாடி மகிழ்ந்தான்.

கண்ணீரும் சோகமும் மீண்டும் காணாமல் போய்விட்டது. மீண்டும் கூட்டத்தில் ஒருவனாக நின்று வேடிக்கை பார்க்க தொடங்கினான்.

இங்கு எதுவுமே மாறவில்லை. அதே வீடு, அதே நெருப்பு, அதே இழப்பு. இது என்னுடையது என்று நினைக்கும் போது அந்த இழப்பு உங்களை சோகத்தில் ஆழ்த்துகிறது.

இது என்னுடையது அல்ல என்று நினைக்கும் போது உங்களை சோகம் தாக்குவது இல்லை.

நான், என்னுடையது, எனக்கு சொந்தமானது என்ற எண்ணம் தான் பற்று. உலகில் எதுவுமே நிரந்தரமானது இல்லை.

ஒருவனுக்கு மட்டுமே சொந்தமானது இல்லை. அனைத்துமே அழிய கூடியது. நான் உட்பட எல்லாமே ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின் அழியக்கூடியது அல்லது வேறு ஒருவனுக்கு சொந்தமாக கூடியது என்பதை நாம் நினைவில் நிறுத்தினாலே போதும். அந்த எண்ணமே பற்றற்ற நிலை.

”பாசங்களையும் ஏனைய குற்றங்களையும் அறுத்து அருள் செய்த இறைவனைப் புகழ்கிறது திருவாசகம் இந்தப்பாடலில்.

வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்

கொந்துகுழல் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்

பந்தம் அறுத்து எனை ஆண்டு பரிசு அறஎன் துரிசும்அறுத்து

அந்தம் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

(திருவா.பா.655)

- வெந்து அழியப் போகும் உடலோடு கூடிய பிறப்பை உண்மை என்று நினைத்து. வினைகள் மேலும் பெருகுமாறு,
- அடர்ந்த கூந்தலும் அழிகிய வளையலும் உடைய மகளிரது குவிந்த முலைமீது விருப்பம் கொண்டு வீழ்ந்து கிடந்தேன்.
- இருந்தும், என்னை ஆட்கொண்ட, பாசங்களையும் ஏனைய குற்றங்களையும் அறுத்து.
- சீவத்தன்மை கெடுமாறு செய்து. வீடுபேறு அருளினாய். இந்தப் பேற்றை வேற யாரால் பெற முடியும். இது அதிசயமே.

## பற்றற்ற நிலை – வேதாத்திரியம் என்ன சொல்கிறது?

”மனிதன் அனுபோக அனுபவ ஆராய்ச்சிகளினால் அறிவு வளர்ச்சி பெற்று தன்னிலை விளக்கம் பெறும்போது உருவ அளவிலே மனிதர்கள் வேறுபட்டிருந்தாலும் உயிர் என்ற நிலையால் ஒன்றுபட்டே ஏகமாகவே இருப்பது அறிவிற்கும் தெளிவாக விளங்கிவிடுகிறது.




அப்போது பிரபஞ்சத்தில் உள்ள சில பொருட்களை மாத்திரம் தனதென்று எண்ணிக் கொள்ளும் பற்றுதல்கள் தானாகவே விடுபட்டுப் போகின்றன.

தேவையுணர்வாலும், தொடர்ந்து வந்த பழக்கத்தாலும் கிடைத்துள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும் அறிவின் வளர்ச்சிக் கேற்றவாறு ஒவ்வொரு மனிதனும தேசம், மதம், சாதி, மொழி, இனம், பொருட்கள், பந்துக்கள் என்றவைகள் மீது உரிமை கொண்டாடுகின்றான்.

அந்தந்த எல்லையில், குறுகியும் நிற்கிறான். இத்தகைய நினைவை நிலையை பற்று என்று சொல்லுகிறோம்.

ஆனால் உயிர் நிலையை அறிந்துகொண்ட பேரறிவின் சிகரமே பற்றற்ற நிலையாகும்.

## 7. பாசமெனும் தாழ் உருவி

**<u>குருதேவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்</u> தனது சீடர்களுக்கு பல விதமான அறிவுரைகளை கொடுத்திருக்கிறார்.**

**அதில் முக்கியமானது ...**
**காமினி , காஞ்சனம் என்பதாகும்.**

**அதாவது காம எண்ணம். பேராசை இவற்றை எப்படி ஒழிப்பது?**

ஈசுவரனை அடைய விரும்புவோரும் சாதன மார்க்கத்தில் வளர்ச்சியை தேடுபவரும் பெண்ணாசை, பொன்னாசை வலையில் விழாமல் தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால் அவர்கள் ஒருபோதும் பரிபூரணம் அடைய மாட்டார்கள் அல்லது முழுமைப் பேறு அடையமாட்டார்கள்.

ஒரு பக்தர் கேட்டார் சுவாமி பகவத் விஷயமாக நான் உபதேசிப்பவை அனைத்தும் மனிதரது மனதில் யாதொரு பலனையும் கொடுக்கவில்லை என்று கேட்டார்.

அததற்கு குரு சொன்னார். அவர்கள் பெண்களோடு சேர்ந்து இருப்பதால் உயர்ந்த உபதேசங்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள சக்தி அற்றவர்களாக இருக்கிறார்கள்.

எனவே உலகப்பற்று உள்ளவர்களுக்கு மோட்சமே கிடையாது என்று பதில் சொன்னார்.

தராசு தட்டில் எந்த பக்கம் கனமாக இருக்கிறதோ அந்தப் பக்கத்தில் தராசு மையத்தை விட்டு சாய்ந்து விலகியிருக்கும்.

அதுபோல பெண்ணாசை பொன்னாசை உள்ள மனம் ஈஸ்வரனையும் விட்டு விலகி தடுமாறுகிறது

நீர் பானையின் அடியில் ஓட்டை ஒன்று இருந்தாலும் அதன் வழியாக தண்ணீரெல்லாம் ஒழுகி வீணாகிவிடும்.

அதுபோல ஒரு ஆன்மீக சாதகன் மனதில் உலகப்பற்று வெகு அற்பமாக இருந்தாலும் அவனது முயற்சிகள் எல்லாம் வீணாகிவிடும்

உன் காம இச்சையை நன்றாய் அடக்கியாள கற்றுக்கொள் அதில் வெற்றி அடைந்தால் சரீரத்தில் ஒருவித மாறுபாடு உண்டாகும்.

அதாவது இந்திரிய சக்திகளை ஆன்மிக சக்திகளாக மாற்றும். “மேதை” என்ற ஒரு நாடி வளருகிறது.

இந்த“மேதை” நாடி வளர்ச்சி அடைந்த பிறகுதான் ஆத்ம விஷயமான உயர்ந்த ஞானம் உண்டாகும்.

பெண்ணாசை பொன்னாசை களில் அழுந்திய மனம் பச்சை பாக்குக்கு சமமாகும். அது பச்சையாக இருக்கும் வரையில் மேல் தோலோடு  ஒட்டிக் கொண்டிருக்கும்.

உள் ஈரம் வற்றியதும் தோல் வேறு பாக்கு வேறாக பிரிந்து விடுகிறது, ஆட்டி பார்த்தால் உள்ளே பாக்கு குலுங்கும்.

அதுபோல பெண்ணாசை பொன்னாசையும் உள்ளே வற்றிப் போனால் ஆத்மா வேறு சரீரம் வேறு என்று தெளிவாகும்.

விஷய சுகங்களில் சிறிதும் சம்பந்தப்படாத மனம் ஈஸ்வரனிடம் சென்று அவனிடம் ஒற்றுமை படுகிறது.

இப்படித்தான் பந்தத்திலிருந்து ஆத்மாக்கள் முத்தி அடைகின்றன.
ஈஸ்வரனிடம் போகும் பாதைக்கு எதிராக
செல்லும் ஆத்மா வந்த படுவதா கும்.

"மகளிரது காமமாகிய மயக்கத்தில் அமிழ்ந்து அழிய இருந்த என்னை, காப்பாற்றி அருள் செய்த இறைவனைப் புகழ்கிறது திருவாசகம் இப்பாடலில்.

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனும் தாழ் உருவி
உய்யும்நெறி காட்டுவித்திட்டு ஓங்காரத்து உட்பொருளை
ஐயன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. (திருவா.பா.656)

- மகளிரது காமமாகிய மயக்கத்தில் அமிழ்ந்து அழிய இருந்த என்னை,
- மெதுவாக அழைத்துவந்து.
- மலம் என்னும் தாழ்ப்பாளை உருவி எடுத்து.
- உய்யும் வழியைக் காட்டிக் கொடுத்து.
- ஓம் என்ற பிரணவத்தின் உட்பொருளையும்,
- என் தந்தை எனக்கு அருளிச் செய்தான். இதனை வேற யாரால் பெற முடியும், இது அதிசயமே.

காயகற்பப் பயிற்சி – வேதாத்திரியம்

காயகல்ப பயிற்சியின் மூலம் உயிர்சக்தி ஒஜஸ் பதங்களாக மாறும்போது மூப்பு வராது, என்றும் இளமையுடன் திகழ்வர், அதாவது கிழவனும் குமரனாவான் என்பது அதன் சாரம்சம்.




காயகல்பம் பிரம்மசாரிகளுக்கு மட்டுமல்ல இல்லற ஜோதிகளுக்கும் ஒரு வரப்பிரசாதம்.

காயகல்பத்தின் இன்னொரு யுக்தி பாலியல் உணர்வை கட்டுப்படுத்தி,வித்து சக்தியை கெட்டிபடுத்தி இளமை நோன்பு காக்கவும் உதவும்.

உடலில் வித்து சக்தி மிகும்போதெல்லாம் இந்த யுக்தியின் மூலம் கெட்டியாக்கி கொண்டே வரமுடியும்.

இதன் மூலம் வித்தில் நீர்ப்புத் தன்மை குறைந்து தூண்டுதல் சமன்படும். காம உணர்வு கட்டுக்குள் வரும்.

சிவவாக்கியர் என்னும் சித்தர் காயகல்பத்தின் அற்புதத்தை இவ்வாறு சொல்கிறார்.

“உருதரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவை
கருத்தில் இருத்தியே கபாலம் ஏற்ற வல்லீரோ
விருத்தரும் பாலராவார் அருள் தரித்த
அம்மைப்பாதம் அய்யன் பாதம் உண்மையே“

**காயகல்பம்** பயின்றால் நிச்சயம் உங்கள் முக ஈர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

**காயகல்பம்** ஆயுள் காக்கும் ஒரு அற்புதப் **பயிற்சி**. நம்மை என்றும் இளமையுடன் வைத்து இருப்பதுடன், நாம் விரும்பும் வரை நம் ஆயுளை நீட்டிக்கவும் உதவுகிறது.

சித்தர்கள் சொல்வார்களே மரணமில்லா பெருவாழ்வு,காயகல்ப பயிற்சியினை கர்மமே கண்ணாக செய்தால் சாத்தியம்

1. ஆயகலை கள்மொத்தம் கணக்கெடுத்தோர்
அறுபத்தி நாலுஎன்றார் அனைத்தும் கற்றும்
காயகற்ப மெனும்கலையைக் கற்கா விட்டால்
கற்றதெல்லாம் மண்புகுமே உடல்வி ழுந்தால்
மாயமெனும் காந்தம்உயிர் வித்து மூன்றில்
மறைந்துள்ள இரகசியங்கள் விளங்கி வாழ்ந்தால்
தீயவினை கள்கழிய உலகுக் கென்றும்
தெளிவான அருள்ஒளியாய் நிலைக்கும் ஆன்மா (ஞாக.பா.1501)

2.
- கறைபோக்கி வித்ததனை உறையச் செய்யும்.
காயகற்பப் பயிற்சியினால் உளநோய் நீங்கும்
நிறைமனமும் ஈகையோடு பொறுமை கற்பு
நேர்நிறையும் மன்னிப்பும் இயல்பாய் ஓங்கும்
இறையுணர்வு விழிப்புநிலை அறிவுக் கூர்மை
இனியசொல் எண்ணத்தின் உறுதி மேன்மை
மறைபொருளாம் மனம் உயிர் மெய் யுணர்வு கிட்டும்.
மாதவமாய்ப் பிறப்பிறப்புத் தொடர் அறுக்கும்!
(ஞாக.பா.1510)



காயகல்பம் உள்ளிட்ட உடல்பயிற்சிகளை நாள்தோறும் ஒழுங்காகச் செய்துவந்தால் நோயின்றி வாழலாம்.

உடலில் உள்ள செல்கள் அனைத்திலும் உள்ள துருவ அமைப்பு சீராகும். மரபு வழியாக வந்த நோய்களைக் கூட சில மாதங்களில் போக்கி நலமடையலாம்.

சுருங்கச் சொன்னால் மனிதகுல வாழ்வில் உள்ள அனைத்துக் குழப்பங்களுக்கும் நீங்கி அமைதியும் நிறைவும் கொண்ட வாழ்வு அமையும்.

## 8. காமத்தை கட்டுப்படுத்த காயகற்பம்

ஒரு சமயம் ஓர் இளைஞன் மிகவும் பதற்றத்துடன் இராமகிருஷ்ணரிடம் வந்து " சுவாமி! காமம் எப்படி விலகும்? சில சமயங்களில் கீழான ஆசைகளும் வெறுக்கத்ததக்க் உணர்ச்சிகளும் என் மனதை அலைக்கழிக்கின்றன. அதனால் நான் அமைதியை இழந்து தவிக்கிறேன்" என்ற சொன்னார்.

அதற்கு இராமகிருஷ்ணர் அவனிடம், "கடவுளின் காட்சியைப் பெறாத வரையில் காமம் அடியோடு விலகுவதில்லை. அதன் பிறகும் உடல் இருக்கும் வரை அதன் சுவடு சிறிது இருக்கவே செய்யும். ஆனால் அதனால் எந்தத் தொந்தரவும் இருக்காது.

"என்னிடமிருந்து முழுமையாகக் காம வாசனை போய்விட்டதென்றா நினைக்கிறாய்? காமத்தை வென்றுவிட்டதாக நான் ஒரு சமயம் நினைத்தேன்.



அதன்பிறகு ஒரு நாள் பஞ்சவடியில் அமர்ந்திருந்த பொழுது என்னை மீறி காம உணர்ச்சி எழுந்தது.

என்னால் அதை அடக்க முடியாது போல் தோன்றியது. நான் ஆடிப் போய்விட்டேன்.

உடனே கீழே விழுந்து மண்தரையில் முகத்தைத் தேய்த்துக் கொண்டு அழுதபடியே அன்னை காளியிடம், "அம்மா, நான் பெரிய தவறு செய்துவிட்டேன். காமத்தை வென்று விட்டதாக இனி கருதமாட்டேன்." என்று சொல்லி முறையிட்டேன்.

நீயோ வாலிபத்தில் நிற்கிறாய். அதனால் உன்னால் அந்த வேகத்தை அடக்க முடியவில்லை. பெரிய வெள்ளம் புரண்டு வரும்போது அது கரையைப் பற்றிக் கவலைப்படவா முடியும்!

கரையோ, எதுவோ வழியிலிருக்கும் எல்லாவற்றையும் அது உடைத்து கொண்டு முன்னேறுகிறது. வயலில் புகுந்து பெரும் உயரத்திற்குத் தண்ணீர் தேங்குகிறது.

"ஆனால், கலியுகத்தில் மனதினால் செய்யும் பாவம், பாவமே இல்லையே என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏதோ ஒருமுறை உன் மனதில் கெட்ட எண்ணம் எழுந்ததற்காக ஏன் படபடக்கிறாய்?

உடலில் இயற்கைப்படி இந்த உணர்ச்சிகள் சில சமயம் வந்து போகத்தான் செய்யும். இதையும் மலம் கழிப்பது போன்ற சாதாரண உணர்ச்சியாகவே நினைத்துக் கொள்ள வேண்டும்.

மலம் கழிக்க வேண்டியிருக்கிறது என்பதற்காக யாராவது கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கவலைப்படுகிறார்களா?

"அதுபோலவே இதைப் போன்ற உணர்ச்சிகளையும் இயல்பானவையாக, அற்பமானவையாகக் கருதி, அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காதே.

"மேலும் இறைவனிடம் மன்றாடி மனமுருகப் பிரார்த்தனை செய். உறரி நாமத்தை ஜபம் செய். வரது பெருமையில் ஈடுபடு.

கெட்ட எண்ணங்கள் வரட்டும். போகட்டும். அவற்றைக் கண்டு கொள்ளாதே. இப்படிச் செய்தால் தாமாகவே அவை கட்டுக்குள் அடங்கிவிடும்.

இந்த வகையில் ஓர் இளைஞன் மற்றொர் இளைஞனுடன் பேசுவது போல் இராமகிருஷ்ணர் பேசினார்.

"காமம் மிகுந்து தடுமாற்றம் அடைந்த போது இறைவன் அருள் செய்தான்" என்கிறது திருவாசகம் இப்பாடலில்

சாதல்பிறப்பு என்னும் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக்கு அணிஇழையார் கலவியிலே விழுவேனை
மாது ஒருகூறு உடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதி எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. (திருவா.பா.657)

- பிறப்பு இறப்பு என்னும் பெரிய சுழலில் சிக்கித் தடுமாற்றம் அடைந்து. காமம் மிகுந்து –
- அழகிய அணிகலன்கள் அணிந்துள்ள மகளிரது சோர்க்கையில் வீழந்து கிடந்த என்னை,

- மாது ஒரு பாகனும், எல்லாவற்றுக்கும் முதல்வனாகவும் விளங்கும் பெருமான்,
- தன் திருவடியில் சேருமாறு அருள் செய்தான். இதனை வேற யாரால் பெற முடியும்? இது அதிசயமே.

காமத்தை கட்டுப்படுத்தலாம் – வேதாத்திரியம்.

உணவு, உறக்கம், உழைப்பு, உடலுறவு, எண்ணம் என்ற ஐந்திலும் அளவு முறை வேண்டும் என்பது வேதாத்திரிய கோட்பாடு.

காமத்தின் விளைவாக வரும் எண்ணத்தில் அளவுமுறை வேண்டும் என்கிறார் மகரிசி.

அம்மா, அப்பா இருவரது காமத்தால் எடுத்த இந்த உடம்பும், காமத்தால் உண்டானதுதானே என்று தேவிமகாத்மியம் கூறுகிறது.

காமத்தைக் கட்டுப்படுத்த சித்தர் யோகமாகிய ”காயகல்பப் பயிற்சியை” மகரிஷி மானுடத்திற்குத் தந்துள்ளார்.

காமத்திற்கு அடிப்படையான விந்துவை பால் சுரப்பியிலிருந்து மேல்நோக்கி எழுப்பி விடுவதால், காமத்தை கட்டுப்படுத்தலாம்.

காமத்தை ஆக்க சக்தியாக மாற்றலாம். இது போன்ற இரகசியங்களைச் சொல்லித் தருகிறது மகரிஷியின் காயகற்பப் பயிற்சி.

”வினைப்பதிவாம் சுமையை விடுத்துத் தூ ய மை பெறவே
நினைவாய் உடலெடுத்தேன் நிலம் மீது விழுந்த பின்னே
எனை மறந்தேன் எந்தன் வினை மறந்தேன் இறைவா
உனை மறந்தேன் ஆனால் நீ உள்ளுணர் எனை மீட்டு”(ஞாக.பா. 1646-5)

**முயற்சியும் பயிற்சியும் செய்து** காமத்தை கட்டுக்குள் வைக்கலாம்.

**வாருங்கள் மனவளக்கலை மன்றத்திற்கு**. **காயகல்பம் பயில்வோம்**. காம உணர்வுகளை ஆக்க உணர்வுகளாக மாற்றுவோம். **வாழ்வில் வளமும் அமைதியும் பேரின்பமும் அடைவோம்**.

# 9. மும்மலம் அறுவித்து

கோவிலில் தேங்காய் உடைப்பதில் உள்ள தத்துவம் – அறியாத புராண கதை.

விநாயகருக்கும், சிவனுக்கும் மூன்று கண்கள் இருப்பதைப் போலத் தேங்காய்க்கும் மூன்று கண்கள் இருப்பது, அதற்குரிய மிக முக்கிய மான சிறப்பு. வழிபாட்டுக்குப் பயன்பட இது முக்கிய காரணம்.



வழி பாட்டில் தேங்காயை பயன்படுத்த எந்தவித வரம்புகளும் இல்லை . இதனை இந்து சமயத்தவர் அனைவரும் பயன்படுத்துகின்றனர்.

மக்கள் இரு கண்களுடன், நன்கு பக்குவப்பட்ட பின்னர் அகக்கண் அல்லது ஞானக் கண்ணைப் பெறுகின்றனர்.

பக்குவமுடைய மனமே இறைவனை வழிபடத்தக்கது. பக்குவ நிலையறிதல், தேங்காய்க்கும், மனத்திற்கும் பொது.

பக்குவம் குலைந்தால் தேங்காயும், மனமும் அழுகிவிடும்.

நம்முடைய வேண்டுதல் நிறைவேற கோவிலுக்கு சென்று தேங்காய் உடைத்து அர்ச்சனை செய்து இறைவனை வழிபடுகிறோம்.

எதனால் இந்த வழிபாடு என்பதற்கான காரணம் வியப்பிற்குரியது.

விநாயகர் ஒருமுறை தன் தந்தையிடம் உன் தலையை எனக்கு பலி கொடு என்று கேட்டாராம், இதன் காரணமாகவே தனது அம்சமாக மூன்று கண்களை கொண்ட தேங்காயை சிவன் படைத்தார் என்கிறது புராண கதை.

இதன் காரணமாகவே வேண்டுதல் விரைவில் நிறைவேற பக்தர்கள் விநாயகருக்கு சிதறு தேங்காய் உடைக்கின்றனர்.

தேங்காய்-மும்மலம், நீர்-உயிர். தேங்காயின் மட்டை, நார், ஓட்டு ப்பகுதிகள் என்ற மூன்றும் மும்மலங்கள் ஆகும்.

இவை படிப்படியே களையப்பட்டவுடன், இறுதியில் அகங்கார ஓடும் நொறுங்க, உடனே வெண்மை தூய்மை பிரகாசிக்கிறது.

தேங்காய்-இதயம்; மூன்றாம் கண்-ஞானக் கண், வெண்மை-சத்துவ குணம். “சத்துவ குணத்துடன் சஞ்சலமில்லாமல், ஞான கண்ணால் இறைவனை தரிசிக்கும்போது, தோன்றும் பக்தி உணர்வுகளை மனம் உணர்கிறது.” என்ற உட்பொருளைத் தேங்காய் உணர்த்துகிறது

”ஆனதே பதியது அற்றதே பசுபாசம்
போனவே மலங்களும் புலன்களும் வினைகளும்
கானகத்தி லிட்டதீயிற் காற்றுவந் தடுத்ததோ
வூனகத்தில் வாயுவன்னி யொன்றியே யுலாவுமே”. (சிவவாக்கியர் பா.453)

ஞான யோகத்தால் நம் உடலில் உள்ள சுத்த தீயும் வாயுவும் ஒன்றாகி உலவினால், காற்றுடன் சேர்ந்த காட்டுத்தீ போல உடலெங்கும் பரவும்.

பதி, பசு, பாசம் ஆகிய மூன்றில் பதியாம் ஈசன் எப்போதும் உடலில் உள்ளது. பசுவாம் ஆன்மாவும், பாசமாம் மனமும் அற்றுப்போய்விடும்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் போய்விடும். ஐம்புலன்கள் ஒடுங்கிவிடும். வினைகள் அனைத்தும் விலகிவிடும்

”மும் மலங்களையும் களைந்து இறைவன் அருள் புரிந்ததை திருவாசகம் இப்பாடலில் சொல்லுகிறது.

செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை

மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்

நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்து

அம்மை எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.
(திருவா.பா.658)

- எல்லாவற்றுக்கும் மூலமாய் விளங்கும் முதல்வனை,
- செம்பொருளின் சிறப்பினை அறியாத மூடர்களோடு அலைந்து கொண்டு இருந்த என்னை அழைத்து வந்து.
- மூன்று மலங்களையும் களைந்து.
- என்னையும் ஒரு பொருளாக மதித்து,
- நாயைப் பல்லக்கில் ஏற்றி அமர வைத்தது போல உயர்ந்த இடத்தில் சேர் ந் தான்.

தாய் போல நின்று இறைவன் செய்த அருளை, வேற யாரால் பெற முடியும்? இது அதிசயமே.

## " வெளியில் வா " - வேதாத்திரியம்

”திறந்துகொள் தான் தனது என்று சொல்லும்
சிற்றறையை; வெளியே வா; அகன்று நோக்கி
பரந்துலவு உலக சமுதயாத்தின் பரப்பகத்தில்
பற்று அறும், கடமையினால் பழுக்கும் ஞானம்.” (ஞாக.பா.)

மும்மலங்கள் எனப்படுவது ஆணவம், கன்மம், மாயை.

ஆணவம் என்பது தன்முனைப்பு. கன்மம் என்பது வினைப் பதிவுகள். மாயை என்பது புலன் கவர்ச்சி.

மும்மலங்களுள் முதன்மையானது ஆணவம்.

இது 'தான்' எனும் அகங்காரப் பற்றாகவும், 'தனது' எனும் பொருள் பற்றாகவும் மாறி உடலளவில் எல்லைக் கட்டிக் கொண்டுள்ளது.

மாயை எனும் மயக்க நிலையில் இயங்கும்போது கன்மம் எனும் வினைப் பதிவுகள் கூடிக்கொண்டே செல்வதால் பிறவியின் நோக்கமாகிய முழுமைப்பேறு எனும் வீடுபேறு அடைவதென்பது எட்டாக் கனியாகவே உள்ளது.

'நான்', 'எனது' எனும் எல்லைக்குள் சிக்குண்ட மனதை அதன் குறுகிய நிலையிலிருந்து மீட்டு, சுற்றியுள்ள உலகையும், பிரபஞ்சத்தையும், இயற்கையையும் மனவிரிவு கொண்டு உற்று நோக்கும்போது. . . .

பரம்பொருளின் எல்லையற்ற உண்மை நிலையும், அதன் அறிவாட்சித் தரமும், அதன் அன்பும் கருணையும், அனைத்து உயிர்களையும் காத்து இரட்சிக்கும் சிறப்பையும் அறிந்து கொள்ளும் போது,

'நான்' எனும் சிற்றெல்லை சிதைந்து, பற்றுகள் நீங்கி, 'நாம்' எனும் சமுதாய உணர்வு மேம்படும்.

ஐவகைக் கடமைகளை முறையாக ஆற்றி சமுதாய உயர்வுக்கு நம்மால் இயன்ற தொண்டு செய்யவேண்டும் எனும் ஞானம் பெருகும். வாழ்க வளமுடன்.

# துணைநின்ற நூல்கள்.

1. திருவாசகப் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம் ,விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம்,ஈரோடு
3. திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
4. இணையதள தகவல்கள்.
5. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
6. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.

7. வேதாத்திரி மகரிஷி பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
8. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.
9. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.
10. குசுநானக் பொன்மொழிகள், இணையதளம்.